[1993 ஏப்ரல் 6

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கெமிக்கல் என்ஜீனியரிங் போன்ற தொழிற் பயிற்சிப் பிரிவுகள் நடத்துவதற்கு, மத்திய அரசினுடைய அங்கீகாரம் தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் நடத்துவதற்கு இல்லை என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 254, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

254—

உலகங்காத்தான் கிராமத்தில் சமுதாயக் கோழி வளர்ப்புக் கூடம்

*10305—திரு. ஆர். பி. பரமசிவம்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சின்னசேலம் தொகுதி உலகங்காத்தான் கிராமத்தில் சமுதாயக் கோழி வளர்ப்புக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு. கு. ப, கிருஷ்ணன். வேளாண்மைத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசால் வறட்சிப் பகுதி என அறிவிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் மட்டுமே, வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தென் ஆற்காடு மாவட்டத்தில் எந்தவொரு ஊராட்சி ஒன்றியமும் வறட்சிக்குள்ளாகும் பகுதி என அறிவிக்கப்படவில்லை, எனவே உலகங்காத்தான் கிராமத்தில், வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின் கீழ் சமுதாய கோழி வளர்ப்புக் கூடம் அமைக்கும் வாய்ப்பு இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தென்னாற்காடு மாவட்டத்தில் சின்னசேலம் வறட்சியான பகுதி என்பதை அனைவரும் அறிவார்கள். அந்த அடிப்படையில்தான் மத்திய அரசு கொண்டு வருகின்ற இந்தத் திட்டத்தின் கீழ் அந்த உலககாத்தான் என்ற பெரிய கிராமத்தில் சமுதாய கோழி வள

1993 ஏப்ரல் 6]

புக் கூடம் நிறுவுவதன் மூலம் அந்த மக்களுக்கு வேலை வாய்ப்பு தருவதற்காக இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தேன். அருள்கூர்ந்து, வேறு பகுதியில், என்னுடைய தொகுதியில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு தர்மபுரி

மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னனுமதியோடு, வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : சிதம்பரனார் இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகனார், காமராஜர், புதுக்கோட்டை, திருநெல்வேலி ஆகிய 7 மாவட்டங்களை, வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் என அறிவித்து, அவ்வாறு அறிவிக்கப்பட்ட பகுதிகளிலே சில ஒன்றியங்களைத் தேர்வு செய்திருக்கிறார்கள். அந்த ஒன்றியங்களில் மட்டுமே இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, தென்னாற்காடு மாவட்டம், இத்திட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கிட்டத்தட்ட 1800 ஏக்கர் பரப்பளவில் ஆட்டுப் பண்ணை மற்றும் கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் அரசுப் பண்ணை இருக்கிறது. அங்கு தண்ணீர் பற்றாக் குறையினால், கிட்டத்தட்ட ஏழு கிணறுகள் தோண்டியும் தண்ணீர் கிடைக்கவில்லை. அவ்வாறு வறட்சியாக இருப்பதனால், அந்த அரசுப் பண்ணையிலே இந்தச் சமுதாய கோழி வளர்ப்புத் திட்டத்தை நிறுவி, அங்குள்ள ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்புத் தருவதற்கு அரசு எதிர்காலத்திலாவது முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் தமிழக அரசின் சார்பாக ஆட்டுப் பண்ணை ஒன்று இருக்கிறது. அந்தப் பண்ணைக்கு வேண்டிய நீர்வளம் அங்கு சற்றுக் குறைவாக இருக்கிற காரணத்தால், அந்த பண்ணையிலே உள்ள ஆடுகளைக் காப்பதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. உறுப்பினருடைய கோரிக்கை, நீர்வளம் அதிகரிக்கக்கூடிய காலத்தில் பரிசீலிக்கப்படும்.